DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 886/2024

Deposition of Witness for P.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பாண்டியராஜன் | **ஜாதி** | : | |
| **த.பெ.** | : | அர்ச்சுணகாளை | **சமயம்** | : | |
| **ஊர்** | : | | **தொழில்** | : | |
| **தாலுகா** | | | **வயது** | | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 30.06.2025.

எதிரி ஆஜர்.

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அது என் வழக்கறிஞருக்கு நான் விபரம் கூறி அவரால் தயார் செய்யப்பட்டு என்னால் கையொப்பம் செய்யப்பட்டதாகும். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக பதிய கோருகிறேன். வழக்கு ஆவணங்களில் 2 முதல் 5 ஆவணங்கள் அசலானது ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.551/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்.

எதிரி தரப்பில் காசோலை சான்றிட்ட நகலான தாக்கல் செய்வதற்கு ஆட்சேபிக்கப்பட்டது. மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்பதால் அதனை கையெழுத்து நிபுணர் கருத்துரைக்கு ஆட்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்பதால் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. புகார்தாரர் அசல் காசோலை மற்றொரு உரிமையியல் வழக்கில் தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்து அந்நீதிமன்றத்தில் இருந்து பெற்ற சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளார். எதிரி தரப்பு ஆட்சேபணை உரிய மனு செய்து அம்மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் அசல் காசோலையானது இந்நீதிமன்றத்திற்கு தருவிக்க வழிவகை உள்ளது. எனவே, சான்றிட்ட நகல்களை எதிரி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | தன்மை |
|---|---|---|---|
| 1. | | புகார்தாரரின் ஆதார் அட்டை எண். 610235911097 | சான்றிட்ட நகல் |
| 2. | 25.08.2023 | எதிரி புகார்தாரருக்கு ரூ.1,50,000/-க்கு கொடுத்த HDFC பாங்க் ராஜபாளையம் கிளை | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | காசோலை எண்.000005 | |
| 3. | 29.08.2023 | தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை புகார்தாரருக்கு கொடுத்த குறிப்பாணை | சான்றிட்ட நகல் |
| 4. | 11.09.2023, 22.09.2023 | புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த சட்ட அறிவிப்பு மற்றும் திருப்பப்பட்ட அஞ்சல் உறை | சான்றிட்ட நகல் |

புகாரை விசாரித்து எதிரியை தண்டித்து இழப்பீடு வழங்குமாறு பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.